மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஓராண்டுக்குள் கட்டிய கட்டடம் ஏதும் 'தட', 'தட' என்று இருப்பதாகத் தெரியவில்லை. (ஆரவாரம்). அதற்கு முன்னால் அப்படிக் கனம் அங்கத்தினர் அனுபவத்தில் பார்த்திருந்தால், அதைப்பற்றி எழுதியனுப்பினால், இந்த அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

]குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைக் கேள்விகள்

(i) 'மாலைமணி' நாளிதழில் வந்த செய்தி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பாலசுப்ரமணியன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது—

"சென்ற மாதம் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது ஏற்பட்ட பதட்ட நிலைபற்றி விவாதிக்கச் சட்டப்பேரவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோரி நான் ஒரு கடிதம் எழுதினேன். அதுபற்றி என்னைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபொழுது, அவ்விதம் கோரப்போவதாக அவர்களிடம் தெரிவித்தேன். சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் என் கடமையை நான் செய்யும்போது சென்னையிலிருந்து வெளிவரும் 'மாலை மணி' என்னும் நாளிதழ் 31—12—1967 தேதிய வெளியீட்டில் நான் அவ்வாறு கோரியதைக் கேவலமாக விமர்சித்தும், என்னைப் பயமுறுத்தியும் விமர்சித்திருக்கிறார்கள். அந்த இதழையும் இத்துடன் இணைத்திருக்கிறேன். குறிப்பிட்ட அக்கட்டுரை சட்டசபை அங்கத்தினரின் உரிமையை மீறியதாகுமென்று நான் கருதுகிறேன். ஆகவே, 'மாலை மணி' நாளிதழ் ஆசிரியரும் வெளியிடுபவருமான திரு. பி. எஸ். இளங்கோ அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையைச் சபையில் எழுப்பத் தங்கள் இசைவை வேண்டுகிறேன்."

இதுபற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும்.

(ii) தமிழக அரசு தலைமைச் செயலகத்திற்கும் பேரவை மண்டபச் சுற்றுப்புறங்களுக்கும் பார்வையாளர் வருகையை ஒழுங்கு படுத்தல்.

Mr. Deputy Speaker :

Hon. Member Thiru N. S. V. Chithan has given notice of a Privilege Motion in regard to regulation of visitors to the Secretariat Buildings and the Precincts of the House. This matter of privilege will be taken up later.